இடம் :
நாள் :

அனுப்புநர் :
…………………..

பெறுநர் :
தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம்,
சென்னை.

மதிப்பிற்குரிய ஐயா வணக்கம்,

பொருள்: எனது ………. தேதியிட்ட புகார், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 18(1)-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டது குறித்து.

பார்வை : வழக்கு எண்: ……………. - ……………… அலுவலகத்தின் பொது தகவல் அலுவலர் மற்றும் ………………….. க்கு எதிரான ……………… தேதியிட்ட விசாரணை அறிவிப்பு - விசாரணை நாள் ………………… .

---

மேற்கண்ட வழக்கில் ………………… அன்று ……………………மணிக்கு தமிழ்நாடு மாநில தகவல் ஆணைய அலுவலகத்தில் நடைபெறும் விசாரணைக்காக ஆஜராகும்படி அனுப்பப்பட்ட அழைப்பாணை கிடைக்கப்பெற்றேன்.

சட்டத்தை மதிக்காமல் தகவலை வழங்க மறுத்த பொது தகவல் அலுவலருக்கு, அன்றைய நாள் ஊதியத்துடன் கூடிய பயணப்படி, தங்குமிடம் உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் அரசால் வழங்கப்படுகிறது. ஆனால், அரசியல் சாசனம் எனக்கு வழங்கியுள்ள உரிமையை இந்த பொது தகவல் அலுவலரிடம் இருந்து பெறுவதற்காக , இவ்வளவு காலம் கடந்து சென்னைக்கு வந்து வாதிடும் அளவிற்கு எனது பொருளாதாரம் இடம் அளிக்கவில்லை. எனவே, நான் விசாரணையை …………. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து காணொளி வாயிலாக பங்கேற்பதற்கான வாய்ப்பை வழங்கும்படி வேண்டுகிறேன்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)(a)(c)-இன் படி, மேல்முறையீட்டின் போது மனுதாரரின் உறுதிமொழி/அறிக்கை/சத்தியப் பிரமாணம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆணையம் வழக்கை முடிவு செய்யலாம். இது தகவல் ஆணைய இணையதளத்தின் FAQ - 10-இல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேல்முறையீட்டு விதிகள், பிரிவு 5(1)(vii)-இலும் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, இந்த வழக்கு சம்பந்தமாக , விசாரணை அதிகாரி அவர்கள் முடிவெடுக்க வசதியாக பின்வரும் உறுதிமொழியுடன் கூடிய எனது வாக்குமூலம் ஆணையத்தின் முன்பாக ………….. அன்று மின்னஞ்சல் வாயிலாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

Scanned with OKEN Scanner
Scanned with OKEN Scanner

பின்வரும் தகவல்கள் என் அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையாகவும் சரியாகவும் உள்ளன என்று இதன்மூலம் சத்திய பிரமானமாக நான் உறுதிகூறுகிறேன்.

a) தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-இன் கீழ் விண்ணப்பித்த தேதி: …………

b) பிரிவு 18(1)-இன் கீழ் எனது புகாரின் தேதி:

c) பொது தகவல் அலுவலர் தகவல் வழங்கிய கடிதத்தின் தேதி :

d) பொது தகவல் அலுவலரிடம் இருந்து எனக்கு பதில் கிடைத்த தேதி:

e) ஆணைய விசாரணை அறிவிப்பு கடிதத்தின் தேதி:

f) எனக்கு விசாரணை அறிவிப்பு கிடைத்த தேதி:

g) விசாரணை நடைபெறும் இடம், நாள், நேரம் :

<u>எனது புகாருக்கான காரணங்கள்:.</u>

1. தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 7(1)-இல் பரிந்துரைக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் எனக்கு கோரப்பட்ட தகவலை வழங்க பொது தகவல் அலுவலர் தவறிவிட்டார். இது தகவல் வழங்க மறுப்பதற்கு ஒப்பாகும்.

2. மத்திய அரசின் DOPT கடித எண். 10/I/2013-IR, நாள் 6.10.2015 மற்றும் தமிழ்நாடு அரசின் ப.ம.நி.து கடித எண். 41633/AR-3/2015-1, நாள் 23.11.2015-இல் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் பதில் வழங்கப்படவில்லை.

3. மனித வள மேலாண்மைத் துறையின் கடித எண். 8879121 R1 2024-1, நாள் 10.12.2024-இல் அறிவுறுத்தப்பட்டபடி, பொது தகவல் அலுவலர் மற்றும் முதல் மேல்முறையீட்டு அலுவலரின் பெயர், பதவியின் பெயர், தொடர்பு எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி எனக்குத் தெரிவிக்கப்படவில்லை, இதன் மூலம் பொது தகவல் அலுவலர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதல்களை மதிக்கவில்லை. சட்டம் மற்றும் விதிகளின்படி தனது கடமையைச் செய்யாத பொது தகவல் அலுவலர், இந்த விசாரணைக்கு சென்னைக்கு வர தனது அலுவலக நேரத்தையும், அரசாங்கப் பணத்தையும் வீணாக்குகிறார்.

4. எனவே, உச்ச நீதிமன்றத்தின் S.L.P(C) எண். 32768-32769/2010 தீர்ப்பின்படி, இந்த விண்ணப்பம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 18(1)-இன் கீழ் மட்டுமே விசாரிக்கப்பட வேண்டும் என்றும், இது பிரிவு 19(3)-க்கு மாற்றப்படக் கூடாது என்றும் ஆணையத்தின் முன் வேண்டுகோள்

Scanned with OKEN Scanner
Scanned with OKEN Scanner

வைக்கப்படுகிறது. இது தொடர்பாக, https://tnsic.gov.in/guidelines_public.php இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள FAQ எண். 25-ன் மீது ஆணையத்தின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

5. இந்த புகார், ஆணையத்தால் பிரிவு 18(1)-இன் படி விசாரிக்கப்படாவிட்டால், சாதாரண குடிமக்களால் பொது தகவல் அலுவலர்களின் அலட்சியமான மனப்பான்மையை கேள்வி கேட்க முடியாது. வழக்குகளின் எண்ணிக்கை ஆணையத்தில் குவிந்துவிடும், மேலும் எதிர்காலத்தில் ஆணையத்தின் அரிய மனித நேரம் வீணடிக்கப்படும்.

6. பொது தகவல் அலுவலர் தனது கடமையைச் செய்வதில் இருந்து தவறியதற்காக, தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 19(8)(b)-இன் கீழ் ரூ.10000 ( ரூபாய் 10000 மட்டும்) இந்த மனுவை சமர்ப்பித்த வகையில் ஏற்பட்ட செலவிற்காகவும், எனக்கு ஏற்பட்ட மன உளைச்சளுக்காகவும் இழப்பீடாக பொது அதிகார அமைப்பிடம் இருந்து கோரப்படுகிறது.

7. பொது அதிகார அமைப்பால் , பொது தகவல் அலுவலர் விசாரணை நடைபெறும் இடத்திற்கு பயணிக்கவும் தங்குவதற்கும் வழங்கப்படும் செலவுத் தொகை அவரிடமிருந்து வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

8. குறித்த நேரத்தில் தகவல் வழங்க தவறியதற்காக, பிரிவு 20(1)-இன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட. நாள் ஒன்றிற்கு ரூபாய் 250/- வீதம் அபராதம் விதிக்காப்பட்டு, வசூல் செய்து அரசு கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும்.

9. பிரிவு 20(2)-இன் கீழ் பொது தகவல் அலுவலராக தனது கடமையில் அலட்சியம் காட்டியதற்காக பொது தகவல் அலுவலலர் மற்றும் முதல் மேல்மரையீட்டு அலுவலர் ஆகியோர் மீது துறைரீதியான நடவடிக்கை தொடங்க பரிந்துரைக்கவும் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

10. பிரிவு 18(3)ன் கீழ் தகவல் ஆணையத்திற்கு உரிமையியல் நீதிமன்றத்திற்கு ஒப்பான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எனது ஆவணங்கள் / தகவல்கள் / வேண்டுகோளின் அடிப்படையில் , பொது தகவல் அலுவலரிடம் தீர விசாரித்து , எனது வாதுரைகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் (Speaking Order) விளக்கமளிக்கும், காரணங்களுடன் கூடிய ஒரு நேர்மையான தீர்ப்புரையை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி,
தங்கள் உண்மையுள்ள
……………………..

Scanned with OKEN Scanner
Scanned with OKEN Scanner